



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரஜப் பிறை 1 ஹிஜ்ரி 1437
Friday of Rajab 1st Hijri 1437
8th April 2016

| | |
|---|---|
| தலைப்பு: | **சந்தேகத்திற்கிடமானவைகளும் தவறான புரிதல்களும்!** |


| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>www.sunnathwaljamath.com |


*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | சந்தேகத்திற்கிடமானவைகளும் தவறான புரிதல்களும்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். வேதங்களையும், இறைதூதுச் செய்தியையும் அனுப்பி வைத்துள்ளான். சந்தேகத்திற்குரியதை விட்டு இந்த ஷரீஅத் அமைப்பை மிகவும் தூய்மையாக வைத்திருக்கிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:282)

وَاتَّقُوا اللَّهَ وَيُعَلِّمُكُمُ اللَّهُ وَاللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

“ஆதலால் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். (நீங்கள் பயந்து நடந்து கொண்டால்) அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறெல்லாம்) கற்றுக் கொடுக்கின்றான். மேலும், அல்லாஹ் அனைத்தையும் மிக அறிந்தவன்”

**முஸ்லிம்களே**! எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மீது அளவற்ற கருணைகளை பொழிந்துள்ளான். தன்னுடைய கிருபைகளை முழுமையாக நமக்கு வழங்கியிருக்கிறான். தன்னுடைய மார்க்கத்தை முழுமையாக நமக்கு தந்துள்ளான். அதன் ஷரீஅத் சட்ட திட்டங்களை எந்த குறையும் இல்லாமல் முழுமைப் படுத்தியுள்ளான். மனிதர்கள் மிக தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஏக இறைவன் சட்ட நுணுக்கங்களை மிக தெளிவாக விளக்கிக் கூறுகிறான்: (11:1)

الر كِتَابٌ أُحْكِمَتْ آيَاتُهُ ثُمَّ فُصِّلَتْ مِنْ لَدُنْ حَكِيمٍ خَبِيرٍ



www.sunnathwaljamath.com

“அலிஃப்; லாம்; றா. (இது) வேத நூல். அனைத்தையும் நன்கறிந்த ஞானவானால் இதன் வசனங்கள் (பல அத்தாட்சிகளைக் கொண்டு) உறுதி செய்யப்பட்ட பின்னர் (தெளிவாக) விவரிக்கப்பட்டுள்ளன”

அதாவது, இந்த வேதத்தில் உள்ள வார்த்தைகள் மிகவும் தெளிவானது, பல உட்பொருளை கொண்டிருக்கும். தெளிவற்ற முறையில் சந்தேக நிலையை உருவாக்காது. சந்தேக நிலை என்றால் தவறான புரிதலும், ஆரோக்கியமற்ற ஆராய்ச்சி முடிவுகளும்தான். இவ்வாறான போக்கினால் குழப்பம், சந்தேகத்தன்மை, ஊனமுற்ற அறிவு வளர்ச்சி, நம்பகத்தன்மை போன்றவை ஏற்படும். இறை வேதத்தின் சட்ட திட்டங்களை மக்களுக்கு தெளிவாக விளக்கி கூறும் பொறுப்பை அல்லாஹ் தன்னுடைய இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒப்படைத்துள்ளான்: (16:44)

وَأَنْزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ

“அத்தூதர்களுக்கும் தெளிவான அத்தாட்சிகளையும், வேதங்களையும் (கொடுத்து அனுப்பினோம்.) அவ்வாறே இந்தக் குர்ஆனையும் (நபியே!) நாம் உங்களுக்கு இறக்கி வைத்தோம். மனிதர்களுக்காக (உங்கள்மீது) இறக்கப்பட்ட இதை நீங்கள் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியுங்கள். (இதன் மூலம்) அவர்கள் கவனித்தறிந்து கொள்வார்கள்”

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இந்த சட்டங்களை முழுமையாக விளக்கியுள்ளார்கள். சந்தேகத்திற்குரியதை விட்டு விலகி இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்கள். அவ்வாறு யாரும் தெளிவற்ற முறையில் ஆய்வுகள் செய்யக்கூடாது என்றும் வன்மையாக தடுத்துள்ளார்கள். போதிய மார்க்க அறிவு இல்லாதவர்கள் தங்களை மட்டுமே பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காக சில சமூக விஷமிகள் சந்தேகத்திற்குரிய முடிவுகளையும், தவறான புரிதல்களையும் பரப்பி வருகிறார்கள். பேராபத்துகளை விளைவிக்க கூடிய நாச வேலைகளில் அப்பாவி இளைஞர்களை இந்த தீவிரவாதிகள் ஈடுபடுத்துகிறார்கள்.

இதனால் சமூகத்தில் நிம்மதியற்ற சூழல் உருவாகிறது, பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படுகிறது, உலக அரங்கில் தலை குனிவை ஏற்படுத்துகிறது. மார்க்கத்தை பற்றிய தவறான புரிதலால் தங்கள் செயல்பாடுகளை இவர்கள் சரிகாண முயற்சிக்கிறார்கள். அதனை மார்க்கத்தின் பெயரால் புனிதப்படுத்தவும் துணிகிறார்கள். இவர்களைப் போன்று தீவிரமாக செயல்பட்டால்தான் இப்பூமியில் அமைதி நிலவும் என்கிற உறுதியான கருத்தை கொண்டுள்ளனர். இத்தகைய சமூக விரோதிகள் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைப் பற்றி பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் தனது வேதத்தில் கூறுகிறான்: (6:119)

وَإِنَّ كَثِيرًا لَيُضِلُّونَ بِأَهْوَائِهِمْ بِغَيْرِ عِلْمٍ إِنَّ رَبَّكَ هُوَ أَعْلَمُ بِالْمُعْتَدِينَ

“எனினும், பெரும்பான்மையினர் அறியாமையின் காரணமாக தங்கள் மனம் போன போக்கில் எல்லாம் (மக்களை) வழி கெடுக்கின்றனர். (நபியே!) நிச்சயமாக உங்களது இறைவன் வரம்பு மீறுபவர்களை நன்கறிவான்”

அதாவது, எந்த வித தொலைநோக்கு பார்வையும் இல்லாமல், போதிய மார்க்க அறிவும் இல்லாமல் தங்களை பின்பற்றும் அப்பாவிகளை இவர்கள் தவறான வழியில் செலுத்துகிறார்கள். இவர்களிடம் உரிய ஆதாரம் எதுவும் இருக்காது. இவர்களின் சொல்லும் செயல்திட்டங்களும் தங்களுடைய மனம்போன போக்கிலேயே அமைந்திருக்கும். இறைவனின் இயல்பான கட்டமைப்பை மீறி செயல்பட துணிவார்கள். அவனுடைய உத்தரவுகளையும், தடைகளையும் கவனத்தில் கொள்ள மாட்டார்கள். ஷைத்தானுக்கு உறுதுணையாக இருப்பார்கள். (71/12 : تفسير الطبري)

இறை வசனங்களையும், ஹதீஸ்களையும் தங்களுடைய செயல்பாடுகளுக்கு ஏற்றவாறு விளக்கம் கூறிக் கொள்வார்கள். இவர்களுடைய உரைகளை கேட்க வேண்டாம் என்று சங்கை நிறைந்த குர்ஆனும், தூய்மையான ஹதீஸும் எச்சரித்து கூறுகிறது. காரணம் அவர்களுடைய அடிப்படையும் நோக்கமும் சரியில்லை. அவர்களின் எண்ணமும் இலக்கும் மோசமானதாகும்.

ஒரு முறை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பின்வரும் இறைவசனத்தை ஓதினார்கள்: (3:7)

هُوَ الَّذِى أَنْزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ آيَاتٌ مُحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللَّهُ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ آمَنَّا بِهِ كُلٌّ مِنْ عِنْدِ رَبِّنَا وَمَا يَذَّكَّرُ إِلاَّ أُولُو الأَلْبَابِ

“(நபியே!) அவனே இவ்வேதத்தையும் உங்கள்மீது இறக்கி வைத்தான். இதில் முற்றிலும் தெளிவான பொருள் கொண்ட வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். மேலும், (உங்களுக்கு) முழுமையான பொருள் தெரிய முடியாத வசனங்களும் இருக்கின்றன. எவர்களுடைய உள்ளங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் தெளிவற்ற பொருள்களுடைய வசனங்களையே தேடிப் பின்பற்றுவார்கள். குழப்பத்தை உண்டுபண்ணக் கருதியும் அதை (தங்களின் தவறான நோக்கத்திற்கேற்ப) மாற்றுவதற்காகவும் இவ்வாறு செய்கின்றனர். ஆயினும், இதன் உண்மைக் கருத்தை அல்லாஹ்வையன்றி ஒருவரும் அறிய மாட்டார்கள். உறுதிமிக்க கல்விமான்களோ (அதன் கருத்து தங்களுக்கு முழுமையாக விளங்காவிட்டாலும்) இதனையும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம். (இவ்விருவகை வசனங்கள்) அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான் என்று கூறுவார்கள். அறிவுடையவர்களையன்றி மற்ற எவரும் (இவைகளைக் கொண்டு) நல்லுபதேசம் அடைய மாட்டார்கள்”

மேல்கூறிய வசனத்தை ஓதிய பிறகு,

إِذَا رَأَيْتُمُ الَّذِينَ يَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ فَأُولَئِكَ الَّذِينَ سَمَّى اللَّهُ فَاحْذَرُوهُمْ



www.sunnathwaljamath.com

“முதஷாபிஹத்தான வசனங்களைத் தேடித் திரிபவர்களை நீங்கள் பார்த்தால் அவர்கள் தாம் (இந்த வசனத்தில்) அல்லாஹ்வால் குறிப்பிடப்பட்டவர்கள் (என்பதைப் புரிந்து கொண்டு) அவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (2665 : مسلم)

சந்தேகத்திற்குரியதை விட்டு சஹாபா பெருமக்கள் தவிர்ந்தே இருந்துள்ளார்கள். எச்சூழ்நிலையிலும் சர்ச்சைக்குரியதை பற்றி பேச மாட்டார்கள். ஒரு முறை ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் ஒருவன் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கில் தன் மனம் போன போக்கில் மக்களிடம் தவறான கருத்துக்களை கூறி வந்தான். அவனை அடிக்கச் சொல்லி உத்தரவிட்டு ஒரு ஆளை அனுப்பினார்கள். பின்னர் அந்த மாகான ஆளுநராக இருந்த அபூ மூஸா அல்அஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். அக்கடிதத்தில் “முஸ்லிம்கள் யாரும் அவனுடன் இருக்க வேண்டாம். அவனுடைய சபையில் யாரும் கலந்து கொள்ளக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். “அவன் தன்னுடைய தவறான கொள்கையில் இருந்து விடுபட்டு மனம் வருந்தி தௌபா செய்து திருந்தும் வரை இந்த உத்தரவு நடைமுறையில் இருக்க வேண்டும்” என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (150 و 146 : الدارمي)

**அல்லாஹ்வின் அடியார்களே**! இவ்வாறு மார்க்கத்தின் பெயரால் விஷம கருத்துக்களை பரப்புபவர்களை பற்றி உலமாக்கள் எச்சரித்து கூறுகிறார்கள். அவர்களுடைய சபைகளை புறக்கணித்து விலகி நிற்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார்கள். இவ்வாறு பல்வேறு வகையான சந்தேகத்திற்குரியவைகள் உள்ளன. தேசத்தின் அமைதியை குலைத்து குடிமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதும் அவற்றில் உள்ளதுதான். மேலும் சமூகங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தும் நோக்கில் விஷம கருத்துக்களை பரப்புவதும் அவற்றில் அடங்கும். ஆதாரமற்ற தகவல்களை எந்த வித உறுதியான விசாரணையுமின்றி செய்திகளை பரப்புவதும் கூடாத செயல். குழப்பமான தகவல், சர்ச்சைக்குரிய செய்தி, முழுமையற்ற அறிவிப்புகளை அவசர அவசரமாக பரப்பிவிடக் கூடாது. இதனால்தான் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

فَمَنِ اتَّقَى الشُّبُهَاتِ اسْتَبْرَأَ لِدِينِهِ وَعِرْضِهِ، وَمَنْ وَقَعَ فِي الشُّبُهَاتِ وَقَعَ فِي الْحَرَامِ

“அனுமதிக்கப்பட்டதும் (ஹலால்) தெளிவானது; தடை செய்யப்பட்டதும் (ஹராம்) தெளிவானது. இவ்விரண்டிற்கும் இடையில் சந்தேகத்திற்கிடமானவையும் (முஷ்தபிஹாத்) இருக்கின்றன. மக்களில் பெரும்பாலோர் அவற்றை அறியமாட்டார்கள். எனவே, யார் சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்த்துக்கொள்கிறாரோ அவர் தமது மார்க்கத்தையும் தமது மானத்தையும் காப்பாற்றிக்கொள்கிறார். யார் சந்தேகத்திற்கிடமானவற்றில் தலையிடுகிறாரோ அவர் அனுமதிக்கபடாதவற்றில் தலையிடுகிறார்” (متفق عليه)

இந்த ஹதீஸின் உட்பொருள்: யார் சந்தேகத்திற்குரியதை விட்டு விலகி இருக்கிறாரோ நிச்சயம் அவர் தன்னுடைய மன நிலையை தூய்மையாக வைத்துக் கொண்டவராவார். இவருடைய மார்க்கப் பற்றுதலில் எந்த குறைவும் இருக்காது. இவ்வாறு சந்தேகத்திற்குரியதை விட்டு விலகி இருப்பவர் மற்ற ஆபத்துகளில் இருந்து தன்னை தற்காத்துக் கொள்கிறார். ( : شرح صحيح البخاري لابن بطال (117/1))

**முஃமீன்களே**! உண்மையான அறிஞர்கள் மார்க்க அறிவில் மிகைத்திருப்பார்கள், தொலைநோக்கு சிந்தனையும், சமூக நலனும் கொண்டிருப்பார்கள், எச்சூழ்நிலையிலும் நடுநிலையை பேணுவார்கள். இத்தகையவர்களிடம்தான் நாம் சென்று நமது சந்தேகத்திற்குரியவைகளை தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். தெளிவான மற்றும் முழுமையான விளக்கங்களை இவர்களிடமே நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று தன்னுடைய சஹாபாக்களுக்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

ஒரு முறை திருமறையின் ஒரு வசனத்தைப் பற்றி சஹாபாக்கள் பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயம் அந்த வசனத்தின் உண்மையான மெய்ப்பொருளில் அவர்களுக்கிடையே மாறுபட்ட புரிதல்கள் தோன்றின. இதன் உச்ச கட்டமாக அவர்களுடைய சப்தங்கள் உயர்ந்தன. அப்போது இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடும் கோபத்துடன் வெளியே வந்தார்கள். அவர்களின் முகம் கடுமையாக சிவந்து இருந்தது. அப்போது சொன்னார்கள்:

إِنَّ الْقُرْآنَ لَمْ يَنْزِلْ يُكَذِّبُ بَعْضُهُ بَعْضًا، بَلْ يُصَدِّقُ بَعْضُهُ بَعْضًا، فَمَا عَرَفْتُمْ مِنْهُ فَاعْمَلُوا بِهِ، وَمَا جَهِلْتُمْ مِنْهُ فَرُدُّوهُ إِلَى عَالِمِه

“நிச்சயமாக திருக்குர்ஆன் அதிலுள்ள ஒன்று மற்றொன்றினை பொய்ப்படுத்துவதற்காக இறங்கவில்லை. மாறாக ஒன்றை ஒன்று மெய்ப்படுத்துவதற்காகவே இறங்கியுள்ளது. நீங்கள் அவற்றில் எதனை புரிந்து கொண்டீர்களோ அதன்படி (அவற்றை) அமலில் நடைமுறைப் படுத்துங்கள். எவற்றை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையோ அவற்றை ஆலிம்களிடம் சென்று விசாரித்துக் கொள்ளுங்கள் (6702 : أحمد)

தொடர்ந்து அடிக்கடி வரும் சந்தேகத்திற்குரியவற்றிற்கு உரிய விளக்கத்தையும் ஆரோக்கியமான சிந்தனையை ஏற்படுத்துவதே உண்மையான கல்வி வளர்ச்சியின் நோக்கமாக இருக்க வேண்டும். எல்லாம் வல்ல ஏக இறைவன் தன்னுடைய தூதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி பின்வருமாறு கூறுகிறான்: (4:113)

وَلَوْلاَ فَضْلُ اللَّهِ عَلَيْكَ وَرَحْمَتُهُ لَهَمَّتْ طَائِفَةٌ مِنْهُمْ أَنْ يُضِلُّوكَ وَمَا يُضِلُّونَ إِلاَّ أَنْفُسَهُمْ وَمَا يَضُرُّونَكَ مِنْ شَيْءٍ وَأَنْزَلَ اللَّهُ عَلَيْكَ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَعَلَّمَكَ مَا لَمْ تَكُنْ تَعْلَمُ وَكَانَ فَضْلُ اللَّهِ عَلَيْكَ عَظِيمًا

“(நபியே!) அல்லாஹ்வின் அருளும், அவனது கிருபையும் உங்கள்மீது இல்லாதிருந்தால் (நீங்கள் தவறிழைத்திருக்கக் கூடும். ஏனென்றால், எந்த விதத்திலும்) உங்களை வழி கெடுத்து விடவேண்டுமென்று அவர்களில் ஒரு கூட்டத்தினர் முடிவு கட்டியிருந்தனர். எனினும், அவர்கள் தங்களையே அன்றி (உங்களை) வழி கெடுக்கவில்லை. அவர்கள் உங்களுக்கு யாதொரு

தீங்கிழைத்து விடவும் முடியாது. அல்லாஹ் இவ்வேதத்தையும், ஞானத்தையும் உங்கள்மீது அருட்செய்து நீங்கள் அறியாத அனைத்தையும் உங்களுக்குக் கற்பித்திருக்கின்றான். உங்கள் மீது அல்லாஹ்வுடைய அருள் மகத்தானதாகவே இருக்கின்றது"

அதாவது, நபியே அவர்கள் உம்மை சந்தேகத்திற்குரியது மற்றும் சர்ச்சைக்குரியதை பற்றியே பேசி கடுமையான நெருக்கடியை தந்தார்கள். அந்நேரத்தில் நீர் அறிந்திருக்காதவற்றை அல்லாஹ் உங்களுக்கு கற்றுக் கொடுத்தான். ((426/1) : تفسير الخازن)

**முஸ்லிம்களே**! தந்தைமார்கள் தங்களுடைய பிள்ளைகளை தீவிரமாக கண்காணிக்க வேண்டும், சந்தேகத்திற்குரியதை விட்டு தமது பிள்ளைகளை காத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளின் விபரீதமான சிந்தனைகளை உடனுக்குடன் கண்டறிந்து அதற்குரிய போதிய விளக்கத்தை அவர்களுக்கு வழங்கி அவர்களை நெறிப்படுத்த வேண்டும். அதிக அக்கறை செலுத்தி அவர்களின் பேச்சுக்களையும் செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும். ஓர் இளைஞனை கட்டமைப்பதில் அவனுடைய தந்தைக்கே அதிக முக்கியத்துவம் உள்ளது. காரணம் பிள்ளையை நேசிப்பதில் ஒரு தந்தைதான் மற்றவர்களைக் காட்டிலும் முன்னிலையில் இருக்கிறார். ஒரு தந்தையிடம்தான் அவருடைய பிள்ளையை பற்றி நாளை மறுமையில் கேள்வி கேட்கப்படும். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

وَالرَّجُلُ رَاعٍ فِي أَهْلِهِ، وَهُوَ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ

"ஒரு மனிதர் தன்னுடைய குடும்பத்தினரை கண்காணிக்க வேண்டும். நாளை மறுமையில் இவருடைய கண்காணிப்பைப் பற்றி கேள்வி கேட்கப்படுவார் (متفق عليه)

அதிக நேரம் ஒதுக்கி பிள்ளைகளிடம் மனம் விட்டு பேச வேண்டும். அவர்களின் வார்த்தைகளை கவனித்து கேட்க வேண்டும். அதிகாரத் தோரணையில் பேச வேண்டாம். மனித நேயத்தின் முக்கியத்துவத்தையும், சமூக அமைதியின் முக்கியத்துவத்தையும் பற்றி இதயப்பூர்வமாக பேசி அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். அவர்களின் தவறான சிந்தனையில் உள்ள விபரீதங்களை பற்றி உருக்கமாக பேசி அதன் ஆபத்துகளை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். அதேசமயம் தீவிரவாத சிந்தனைகளை எவ்விதம் அடையாளம் கண்டு கொள்வது என்கிற நுணுக்கத்தையும் அவர்களுக்கு நாம் விளக்கிக் கூற வேண்டும்.

மார்க்க ரீதியாக மனம் விட்டு பிள்ளைகளிடம் பேசுவதால் அவர்களின் இறுக்கமான மனநிலை தெளிவு பெறும். சுய ஆளுமையின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் கவனத்தில் கொள்வார்கள். வழிகெட்ட கூட்டத்தினரை விட்டு எச்சரிக்கையாக இருப்பார்கள். பரபரப்பிற்காக பரப்பப்படும் ஆதாரமற்ற தகவல்களையோ வதந்திகளையோ நம் பிள்ளைகள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

யா அல்லாஹ்! தடுமாறிவிடும் சூழலை விட்டு எங்களை நீ விலக்கிவிடுவாயாக!! பயன் தரக்கூடிய கல்வியறிவையும், நற்செயல்கள் செய்யும் பாக்கியத்தையும் நீ எங்களுக்கு தருவாயாக!!


www.sunnathwaljamath.com

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! நம் தேசத்தின் வளர்ச்சி மற்றும் இறையாண்மை பற்றிய சித்தாந்தங்களை நமது பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். அவற்றின் மீது அவர்கள் உறுதியான பற்றுதலும் அக்கறையும் கொண்டிருக்க வேண்டும். தாயகத்தை நேசிப்பது இறைநம்பிக்கையின் ஓர் அடையாளம் என்பதை அவர்களுக்கு நாம் புரிய வைக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் தனது தேசத்தை சார்ந்த தனி நபர்தான்.

எனவே அர்ப்பணிப்பு உணர்வோடு தேசிய வளர்ச்சியில் ஈடுபட வேண்டும், தேசிய பாதுகாப்பிற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். உண்மையான அக்கறையோடு நமது தேசத்திற்காக உழைத்தால் இவ்வுலகிலும், மறு உலகிலும் ஈடேற்றமான வாழ்வை பெற முடியும். நற்செயல்களில் மிக முக்கியமான அவசியமான நற்செயலும் இதுதான். காரணம் இதன் மூலம் ஒட்டு மொத்த சமூகத்தின் பாதுகாப்பும், நமது அடுத்த தலைமுறையின் வாழ்வும் அடங்கியிருக்கிறது. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (99:7)

فَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ

"ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர், (அங்கு) அதனையும் கண்டுகொள்வார்"

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )



www.sunnathwaljamath.com

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.
யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).